இயல் 2

புறத்திணை இயல்

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி இவைகளைப் பற்றிய திணை, துறைகளின் விளக்கங்கள் - எடுத்துக் காட்டுப் பாடல் விளக்கங்கள் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

போன்றது.

வெட்சித் துறைகள் பதினான்கு

படை இயங்கு அரவம், பாக்கத்து விரிச்சி,
புடை கெடப் போகிய செலவே, புடை கெட
ஒற்றின் ஆகிய வேயே, வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்து இறை, முற்றிய
ஊர் கொலை, ஆ கோள், பூசல் மாற்றே,
நோய் இன்று உய்த்தல், நுவல்வழித் தோற்றம்,
தந்து நிறை, பாதீடு, உண்டாட்டு, கொடை, என
வந்த ஈர் - ஏழ் வகையிற்று ஆகும். 1007.

பகையரசர் பசுக் கூட்டத்தைக் கவரப் புறப்பட்ட படைவீரர்கள் எழுப்பிய ஆரவாரப் பேரொலி, படைவீரர்கள் செல்லும் பக்கத்து இடங்களில், விரிச்சிப் பறவை காட்டும் புள்வாய்ச் சகுனம், அதாவது நல் நிமித்தம், பக்கத்தில் உள்ளோர் அறியா வண்ணம் செல்லுதல், பகையரசர் ஒற்றறிய இடந்தராமல் பகை நாட்டின் நிலையை ஒற்றறிந்த வண்ணம்

இருத்தல், ஆநிரை கவர ஏற்ற சமயம் அறிந்து பகை நாட்டைச் சுற்றி வளைத்தல், பகைவரைத் தாக்கி அழித்தல், பசுக்கூட்டங்களைக் கவர்தல், ஆநிரை மீட்க வரும் பகைவரோடு போரிட்டு வென்று, அவர்களை விரட்டியடித்துக் கவர்ந்த பசுக்கூட்டத்தை பாதுகாப்பாக அவை வருந்தா வண்ணம் ஓட்டி வருதல், ஆநிரை கவரப் போன வீரர்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சுற்றத்தாரிடம் வந்து சேர்தல், பசுக்களைக் கொண்டு வந்து தம்மிடத்தில் நிறுத்துதல், பின்னர் கவர்ந்து வந்த பசுக்களைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளுதல், ஆநிரை கவர்ந்து வந்த மகிழ்ச்சியை - வெற்றியை உண்டு மகிழ்ந்து கொண்டாடுதல் தமக்குள் பங்கிட்டுக் கொண்ட பசுக்களை, பாணர் முதலிய இரவலர்க்குத் தந்து மகிழ்தல் என்னும் பதினான்கும்; வெட்சித் திணைக்குரிய துறைகளின் வகையும் பெயரும் ஆகும்.

அவை: - படை இயங்கு அரவம் (2) விரிச்சி (3) செலவு (4) ஒற்று (5) புறத்து இறை (6) ஊர்க் கொலை (7) ஆ கோள், (8) பூசல் மாற்று, (9) நோய் இன்றி உய்த்தல், (10) நுவலுழித் தோற்றம் (11) தந்து நிறை (12) பாதீடு (13) உண்டாட்டு, (14) கொடை.

விரிச்சி - சகுனம் - புடை - பக்கம். வேய்ப்புறம் - வெளியிடம். ஆகோள் - பசுக்களைக் கவர்தல். பூசல் - போர். நுவல் வழி - சொல்லிய படி. பாதீடு - பங்கிடுதல். உண்டாட்டு - உண்டு களித்தல்.

மறம்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே. 1008.

மறக்குல மக்களின் புகழினைப் போற்றிக் கூறுதலும் வெற்றி தரும், வீரத்திருமகளாம் கொற்றவையைப் பாடிப் பரவிப்

பணிதலும், குறிஞ்சித் திணைக்கு ஒத்ததான - புறத்திணை வெட்சிக்கு, இலக்கணமாம்.

வெட்சி - கரந்தைத் திணைத் துறைகள்

வெறி அறி சிறப்பின் வெவ் வாய்வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்; உறு பகை
வேந்திடை தெரிதல் வேண்டி, ஏந்து புகழ்,
போந்தை, வேம்பே, ஆர், என வரூஉம்
மா பெருந் தானையர் மலைந்த பூவும்;
வாடா வள்ளி, வயவர் ஏத்திய
ஓடாக் கழல் - நிலை உளப்பட, ஓடா
உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்;
மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பின்
தாவா விழுப் புகழ்ப் பூவை நிலையும்;
ஆர் அமர் ஓட்டலும்; ஆ பெயர்த்துத் தருதலும்;
சீர் சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தலும்;
தலைத் தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்;
அனைக்கு உரி மரபினது கரந்தை. அன்றியும்,
வரு தார் தாங்கல், வாள் வாய்த்துக் கவிழ்தல், என்று
இரு வகைப்பட்ட பிள்ளை நிலையும்;
வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க,
நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டும்;
காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,
சீர்த்த மரபின் பெரும்படை, வாழ்த்தல், என்று
இரு- மூன்று மரபின் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட எழு - மூன்று துறைத்தே. 1009.

வெறி அறி சிறப்பின் - வெறியாட்டு முறை அறிந்து அதில் சிறந்தவனான, தெய்வம் பலி தரச் சொல்வதாகத் தன்னுடைய கொடிய வாய் திறந்து கூறும் வேலன் கோவில் பூசாரி, தன் மேல் தெய்வம் வந்ததாகக் கூறிக் காந்தள் மாலை அணிந்து ஆடும் காந்தளும் (வெய்யவாய் வேலன் என்பதற்கு, போரில்

வஞ்சித் திணைக்குரிய துறைகள்

இயங்கு படை அரவம், எரி பரந்து எடுத்தல்,
வயங்கல் எய்திய பெருமையானும்,
கொடுத்தல் எய்திய கொடைமையானும்,
அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும்,
மாராயம் பெற்ற நெடுமொழியானும்,
பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்,
வரு விசைப் புனலைக் கற் சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்,
பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்,
வென்றோர் விளக்கமும், தோற்றோர் தேய்வும்,
குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்,
அழி படை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ,
கழி பெருஞ் சிறப்பின் துறை பதின்மூன்றே. 1011.

உழிஞைத் திணைத் துறைகள்

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்,
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்,
தொல் எயிற்கு இவர்தலும், தோலது பெருக்கமும்,
அகத்தோன் செல்வமும், அன்றியும் முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும், திறல் பட
ஒரு தான் மண்டிய குறுமையும், உடன்றோர்
வரு பகை பேணார் ஆர் எயில் உளப்பட,
சொல்லப்பட்ட நால் - இரு வகைத்தே. 1014.

தன்னை மன்னன் என்று ஏற்றுக் கொள்ளாதவர்களும் (கொள்ளார்) தன் ஆணைக்குக் கீழ்பட மறுப்பவர்களும் ஆகிய

தும்பைத் திணைத் துறைகள்

தானை, யானை, குதிரை, என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்;
வேல் மிகு வேந்தனை மொய்த்தவழி, ஒருவன்
தான் மீண்டு எறிந்த தார் நிலை; அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்;
ஒருவன், ஒருவனை, உடை படை புக்கு,
கூழை தாங்கிய எருமையும்; படை அறுத்து,
பாழி கொள்ளும் ஏமத்தானும்;
களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்; களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும்; வாள் வாய்த்து,
இரு பெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகை நிலைக் கண்ணும்;
செருவகத்து இறைவன் வீழ்ந்தென, சினைஇ,
ஒருவன் மண்டிய நல் இசை நிலையும்;
பல் படை ஒருவற்கு உடைதலின், மற்றவன்
ஒள் வாள் வீசிய நூழிலும்; உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே. 1018

தானை- காலாட்படை, வீரர்கள் அணிவகுப்பு. போர் செய்யப் புறப்படும் வேந்தன் நால்வகைப் படைகளுடனும் போவான். காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை என்பவையே அவை. இங்கே பகைவர் (நோனார்) கண்டஞ்சும் (உட்கும்) மூவகைப் (காலாள், யானை, குதிரை) படை நிலையும், வேலெடுத்துப் போரிட்டுக் கொண்டிருந்த மன்னனை, பகை வீரர் வந்து சூழ்ந்து கொண்ட நிலையில், தானைத் தலைவன் ஒருவன் விரைந்து வந்து, போர்விலக்கி

வாகைத் திணை வகை

'அறு வகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்,
ஐவகை மரபின் அரசர் பக்கமும்,
இரு-மூன்று மரபின் ஏனோர் பக்கமும்,
மறு இல் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்,
நால் - இரு வழக்கின் தாபதப் பக்கமும்,
பால் அறி மரபின் பொருநர் கண்ணும்,
அனை நிலை வகையொடு ஆங்கு எழு வகையான்
தொகை நிலைபெற்றது' என்மனார் புலவர். 1020.

வேதம் ஓதுதல் ஓதுவித்தல், வேள்வி செய்தல் செய்வித்தல் ஈதல், ஏற்றல், என்னும் ஆறுவகைப்பட்ட தொழில் செய்வதைக் கடமையாகக் கொண்ட பார்ப்பனர் பக்கமும், ஓதுதல், வேள்வி செய்தல், ஈதல், படைக்கருவிகள் வழங்குதல், குடிமக்களைக் காத்தல் என்னும் ஐந்து வகைப்பட்ட கடமைகளைச் சிறப்புறச் செய்ய வேண்டிய மன்னன் பக்கமும், ஓதல், வேள்வி செய்தல், ஈதல், உழவுத் தொழில் புரிதல், வாணிபம் செய்தல், பசுக்களை வளர்த்துப் பாதுகாத்தல், என்னும் ஆறு (இருமூன்று) கடமை களை மேற்கொள்ளும் வணிகர் பக்கமும், உழுதல், பிற தொழில்கள் செய்தல், விருந்தோம்பல், விலங்கு வளர்த்தல், வழிபாடு செய்தல், கற்றல் என்னும் ஆறு தொழில் புரிவதைக் கடமையாகக் கொண்ட வேளாளர் பக்கமும், வெயில், பனி

காஞ்சித் திணைத் துறைகள்

'மாற்ற அருங் கூற்றம் சாற்றிய பெருமையும்,
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்,
பண்பு உற வரூஉம் பகுதி நோக்கிப்
புண் கிழித்து முடியும் மறத்தினானும்,
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோற்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்,
"இன்னன்!" என்று இரங்கிய மன்னையானும்
"இன்னது பிழைப்பின் இது ஆகியர்!" எனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்,
இன் நகை மனைவி பேஎய் புண்ணோன்-
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவன் - தீர்த்த வேலின்
பேஎத்த மனைவி ஆஞ்சியானும்,
நிகர்த்து மேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்,
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ,
ஈர்- ஐந்து ஆகும்' என்ப. பேர் இசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் - மயக்கத்தானும்,
தாமே எய்திய தாங்க அரும் பையுளும்,
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந்தமும்,
நனி மிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனி மகள் புலம்பிய முதுபாலையும்,

கழிந்தோர் தேஎத்துக் கழி படர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்,
காதலி இழந்த தபுதார நிலையும்,
காதலன் இழந்த தாபத நிலையும்,
நல்லோள் கணவனொடு நளி அழல் புகீஇச்
சொல் இடையிட்ட பாலை நிலையும்,
மாய் பெருஞ் சிறப்பின் புதல்வற் பயந்த
தாய் தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்,
மலர் தலை உலகத்து மரபு நன்கு அறியப்
பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு,
நிறை அருஞ்சிறப்பின் துறை இரண்டு உடைத்தே. 1023.

மாற்றரும் கூற்றம் - எவராலும் தடுத்துத் தப்பித்துக் கொள்ள முடியாத மரணத்தைப் பற்றிய **'பெருங் காஞ்சியும்;'** இளமை நீங்கியோர் (கழிந்தோர்) அதாவது முதியோர் மற்றவர்களுக்கு (ஒழிந்தோர் - மற்றையோர், அதாவது இன்னும் இளமையோடு இருப்பவர்கள்) இளமையின் சிறப்பு பற்றிக் கூறிய 'முதுகாஞ்சியும்;' போரில் இறந்த வீரன் ஒருவன் நடு கல்லாகி நிற்கின்ற தன்மையும், உடல் அழியும் தன்மையது என்ற உண்மை அறிந்த (பண்புற வரூஉம் பகுதி நோக்கி), புண்பட்டுக் கிடக்கின்ற வீரன் தன் புண்ணைத் தானே வாளால் கிழித்துக் கொண்டு மாயும் போர் மறம் கூறும் **'மறக்காஞ்சியும்'**. இப்படிப் போரில் புண்பட்டுக் கிடப்பவனைப் பரிந்து காக்கச் சுற்றத்தார் (ஏமச்சுற்றம் - காக்கும் உறவினர்) இல்லாமையால் அவனைப் பேய்கள் காக்கும் நிலையான **'பேய்க் காஞ்சியும்;'** போரிட்டு வீரமரணம் அடைந்தவன் எத்தகைய வீரன் - ஆற்றலாளன் என்பது அறிந்து, மற்றவர் வருந்தி, இரங்கிக் கூறும் **'மன்னைக் காஞ்சியும்'**. ''இதை நான் செய்து முடிப்பேன் இல்லையெனில் இத்தன்மையன் என்று ஊரார் பழிக்கு ஆளாவேன் என்று, சபதம் செய்து கூறும் ஒப்பற்ற சிறப்புடைய **'வஞ்சினக் காஞ்சியும்'** புண்பட்டுக் கிடக்கின்ற வீரன் வருந்தி நிலைகுலைந்து

பாடாண் திணைத்துறை இவையும்

தாவில் நல்இசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்;
கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்,
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி,
பெற்ற பெரு வளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ,
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்;
சிறந்த நாளினில் செற்றம் நீக்கி,
பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்;
சிறந்த சீர்த்தி மண்ணுமங்கலமும்;
நடை மிகுத்து ஏத்திய குடை நிழல் மரபும்;
மாணார்ச் சுட்டிய வாள் மங்கலமும்;
மன் எயில் அழித்த மண்ணு மங்கலமும்;
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்;
பெற்ற பின்னரும் பெரு வளன் ஏத்தி,
நடைவயின் தோன்றிய இரு வகை விடையும்;
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி,
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்;
காலம் கண்ணிய ஓம்படை - உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே. 1034.

கண்ணுறங்கும் வேந்தன் குன்றாத புகழோடு இன்னும் நன்றாக வாழ்ந்தோங்க வேண்டும் என்றெண்ணி வேந்தனைச் சுற்றி நிற்போர், வேந்தன் துயில் எழப் பாடும் 'துயிலெடை நிலை' என்னும் பள்ளி எழுச்சிப் பாட்டும்; பாடிப் பரிசில் பெறவரும், கூத்தரும், பாணரும், பொருநரும் விறலியும், எதிரே தம்மைப் போலவே வேந்தனைப் பாடிப் பரிசில் பெறவரும் தம்போன்ற பாணர் முதலானோரிடம்; தாம் பரிசாகப் பெற்ற பெருஞ் செல்வத்தை அவர்கள் அறியக் காட்டி, அவர்களையும் 'சென்று இதுபோல் கொடைவளம்' பெறுக எனக் கூ றி வழிகாட்டும்

இவ்வியல் தொடர்பான கருத்துக்களையும்
விளக்கங்களையும் பாடப் புத்தகத்தில் பார்க்க.